සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නර්තනය (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Bharatha) I

53 T I

පැය දෙකයි
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நடராஜர் திருவுருவத் தத்துவத்தில் 'நமசிவாய' எனும் பஞ்சாட்சர மந்திரத்தின் நாம எழுத்துக்கள் குறிப்பன முறையே
(1) திருத்தோள், திருவயிறு, திருமுகம், திருமுடி, திருப்பாதம்
(2) திருப்பாதம், திருமுகம், திருவயிறு, திருத்தோள், திருமுடி
(3) திருமுடி, திருத்தோள், திருவயிறு, திருமுகம், திருப்பாதம்
(4) திருமுகம், திருவயிறு, திருப்பாதம், திருமுடி, திருத்தோள்
(5) திருப்பாதம், திருவயிறு, திருத்தோள், திருமுகம், திருமுடி

**2.** மண்டல பேதங்களில் 'மோடிதம்' எனும் பாதபேதம் பயன்படுத்தப்படும் அடவு
(1) மூன்றாவது நாட்டடவு (2) முதலாவது மண்டியடவு
(3) இரண்டாவது குதித்து மெட்டடவு (4) முதலாவது தத்தெய்தாம் அடவு
(5) முதலாவது தாதெய்தெய்த அடவு

**3.** சோடசோபசாரத்தில் 'கீதவாத்யம்' எத்தனையாவது அங்கமாக இடம்பெறும்?
(1) 16 (2) 15 (3) 14 (4) 12 (5) 9

**4.** 'தேவதாசிகளின் மோசவழி' என்னும் நூலை எழுதியவர் யார்?
(1) ரூபவதி (2) மூவலூர் இளமாமிர்தம் அம்மையார்
(3) ரத்ரகிரி (4) கோமளவல்லி
(5) சிவஞானசம்பந்த தலைக்கோலி

**5.** கவிஞர் ரவீந்திரநாத்தாகூர் அவர்களால் 1917 ஆம் ஆண்டு சாந்திநிகேதனில் அறிமுகப்படுத்தப்பட்ட சாஸ்திரிய நடனம் எது?
(1) மணிப்புரி (2) குச்சுப்புடி (3) பரதநாட்டியம்
(4) ஒடிசி (5) கதகளி

**6.** இசைக் கருவிகளோடு பாடல், நடனம் ஆகியவற்றை இணைத்து நடத்தும் 'சங்கீதமேளம்' தோன்றிய காலம்
(1) ஆங்கிலேயர் காலம் (2) சோழர் காலம்
(3) பல்லவர் காலம் (4) நாயக்கர் காலம்
(5) சங்கமருவிய காலம்

**7.** சொக்கத்தை முதன்முதலாகச் சிற்பக்காட்சியாக்கியவர்
(1) இராஜேந்திர சோழன் (2) குமாரகம்பணன்
(3) முதலாம் இராசராசன் (4) இராசசிம்மன்
(5) மகேந்திரவர்மன்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**8.** “ஆடல் கூத்தினோடு அவிநயம் தெரிவோர் நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்...” என்னும் பாடலடி இடம்பெறும் காப்பியம்
(1) சிலப்பதிகாரம் (2) சீவகசிந்தாமணி
(3) குண்டலகேசி (4) வளையாபதி
(5) மணிமேகலை

**9.** சுத்த, அசுத்த, அதியந்த சுத்த என மூன்று வகைப்படும் ரஸம்
(1) பயானகம் (2) பீபத்ஸம் (3) வீரம்
(4) ரௌத்திரம் (5) சிருங்காரம்

**10.** வசந்தன் கூத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் யாவை?
(1) மிருதங்கம், ஹார்மோனியம் (2) மிருதங்கம், டோலக்
(3) டோலக், ஹார்மோனியம் (4) மத்தளம், ஹார்மோனியம்
(5) மத்தளம், சல்லாரி

**11.** கண்ட ஜாதி திரிபுடை தாளம் கண்டகதி அடையும் போதும் மிஸ்ர ஜாதி அட தாளம் கண்டகதி அடையும் போதும் எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
(1) 95 (2) 125 (3) 135 (4) 147 (5) 161

**12.** ஆங்கிக அபிநயத்தை ‘சாயி’ என்னும் வேறு பெயரால் குறிப்பிடும் நூல் யாது?
(1) நாட்டிய சாஸ்திரம் (2) அபிநயதர்ப்பணம்
(3) அபிநயசாரசம்புடம் (4) கூத்தநூல்
(5) மகாபரத சூடாமணி

**13.** ஏந்தல் நடனத்தின் சிறப்புப் பண்புகளில் ஒன்று
(1) மனித அசைவு, குதிரை அசைவு இரண்டும் கலந்த இரு நிலைகளில் ஆடுதல்
(2) கை, கால்களில் கந்தல் துணிகளைத் திணித்து அவற்றில் விரல்களைப் பொருத்தியிருத்தல்
(3) முக்கிய பாத்திரமேற்ற ஒவ்வொருவருக்கும் தனித்தனி ‘பிரவேசத்தரு’ பாடப்படல்
(4) வேடிக்கை காட்டி, கதைக்குப் பாலம் அமைக்கும் ‘கோணங்கி எனும்’ பாத்திரம் இடம்பெறல்
(5) ஆடுவோர் ஒருவரோடொருவர் இசை பொருந்த உரையாடி ஆடுதல்

**14.** இடது விலாப்பகுதியில் இடது கரத்தால் இடுக்கி வைத்துக்கொண்டு வாசிக்கப்படும் இசைக்கருவி எது?
(1) வயலின் (2) தப்பு (3) யாழ் (4) செண்டை (5) பறை

**15.** பின்னணி ஒலி உத்திகளில் ரயில் நிலையத்தைச் சித்திரிக்கும் ஒலி உத்தி யாது?
(1) கார், பேருந்து, முச்சக்கர வண்டி என்பவற்றின் ஒலி
(2) நாய் குரைக்கும் ஓசை
(3) பண்டங்கள் விற்போர் குரல் ஓசை
(4) மாட்டுவண்டி ஓட்டும் ஒலி
(5) பறவைகள் கீச்சிடும் ஒலி

**16.** மிஸ்ர ஜாதி ஜம்பை தாளத்தின் அங்கக் குறியீடு யாது?
(1) $|_7\,O\,|_7\,|_7$ (2) $|_7\,O\,|_7$ (3) $O\,|_7$
(4) $|_7 \cup O$ (5) $|_7\,|_7\,O\,O$

**17.** “அற்புத நர்த்தனம் அழகுடன் ஆடிடும் ஆனைமுகத்து ஓங்காரரூபனே...” என்னும் பாடலடி உணர்த்தும் கடவுளைக் குறிக்கப் பயன்படும் வலது, இடது கை முத்திரைகள் முறையே
(1) சிகரம், மயூரம் (2) கபித்தம், கபித்தம்
(3) திரிபதாகம், பதாகம் (4) பதாகம், பதாகம்
(5) சிகரம், கடகாமுகம்

**18.** பதவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியில் இடம்பெறுவது யாது?
(1) பல்லவி (2) முத்தாயிஸ்வரம் (3) சரணஸ்வரம்
(4) அனுபல்லவி (5) திரிகாலத்தீர்மானம்

[பக். 3 ஐப் பார்க்க

**19.** பல்லவர் காலத்தில் நடனக்கலை வளர்ச்சிக்குச் சிறப்பான பங்களிப்புச் செய்த சமயங்கள் யாவை?
(1) சமணம், பௌத்தம் (2) வைணவம், பௌத்தம்
(3) சைவம், சமணம் (4) சைவம், வைணவம்
(5) சமணம், வைணவம்

**20.** பரத முனிவர் கூறும் அரங்க அமைப்பின் வகைப்பாடுகள் எத்தனை?
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து (5) ஆறு

**21.** செம்பூர்சேயோன் சாத்தனார் எழுதிய நாட்டிய நூல் யாது?
(1) பரதசேனாதிபதியம் (2) செயிற்றியம் (3) பஞ்சமரபு
(4) கூத்தநூல் (5) குணநூல்

**22.** மணிப்புரியில் ஆடவர் தாண்டவம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?
(1) சிபிதாங்கா, ஸ்புகிதாங்கா (2) நிருத்தம், நாட்டியம்
(3) சலனம், குன்தானம் (4) லாஸ்யம், நிருத்தியம்
(5) ஆங்கிகம், வாசிகம்

**23.** சோடஷாங்கங்களில் $\overset{0}{\underset{8}{|}}$ என்னும் குறியீடு எதனைக் குறிக்கிறது?
(1) புலுத விராமம் (2) புலுதம்
(3) குரு விராமம் (4) குரு த்ருத விராமம்
(5) புலுத த்ருதம்

**24.** பாம்பு போன்ற அசைவு கொண்ட சாரிபேதம்
(1) பஷ்யாத்சங்கமணம் (2) ததஹ்பரம்
(3) விஷமசஞ்சரஹ (4) வேகினி
(5) சரணம்

**25.** சோழர் கால ஆடற் கலைஞர்கள் ஆடல் பயில உதவிய கோயில் மண்டபங்களில் ஒன்று
(1) திருநெய்தானம் (2) மகா மண்டபம் (3) திருக்காவணம்
(4) அர்த்த மண்டபம் (5) திருக்கோவலம்

**26.** "தீதிலாத வேல்வீர சேவற்கொடியோனே..." என்பதில் சேவற்கொடியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் வலது, இடது கை முத்திரைகள் முறையே
(1) அர்த்தபதாகம், தாமரைச்சூடம் (2) சிகரம், சுகதுண்டம்
(3) பிரம்மரம், அராளம் (4) பிரம்மரம், அலபத்மம்
(5) மயூரம், அர்த்தபதாகம்

**27.** ஸ்ரோதோவக யதி வடிவத்தைப் பிரதிபலிக்கும் இசைக்கருவி
(1) புல்லாங்குழல் (2) நாகசுரம் (3) சங்கு
(4) முரசு (5) மிருதங்கம்

**28.** எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களின் அமைப்பில் இடம்பெறும் சக்கரங்களின் எண்ணிக்கை யாது?
(1) 06 (2) 07 (3) 12 (4) 16 (5) 72

**29.** தகதிமி தகதிமி தகதிமி தக
த திங் |, கிணதொம் த திங், கி |
ண தொம் த திங், கிண தொம் |
மேற்படி பஞ்சஜாதி 'த திங் கிண தொம்' அமைந்துள்ள ஜாதி
(1) கண்டம் (2) மிஸ்ரம் (3) திஸ்ரம்
(4) சதுஸ்ரம் (5) சங்கீரணம்

**30.** "அவரே வதியும் நல்லை அழகுத் தலம் செல்வாய் தவமான எந்தன் காதல்தனைக் கந்தனுக்குச் சொல்வாய்.." என்பது
(1) கீரத்தனம் ஆகும். (2) விருத்தம் ஆகும். (3) பதம் ஆகும்.
(4) சப்தம் ஆகும். (5) கௌத்துவம் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**31.** தான் கன்னிப்பருவம் அடைந்ததை அறிந்து கொண்டு ஸ்ருங்கார விலாஸத் தன்மைகளை நன்கறிந்து தன் பதியுடன் கூடி சுகம் அனுபவிப்பதில் மிகுந்த ஆசையுடையவள்

(1) முக்தா (2) ஸ்வீயா (3) ப்ரகல்பா
(4) பரகீயா (5) சாமானியா

**32.** "உருகி உருகி உன்னை உளமாரப் பாடினேன்...
பெருகிக் கண்ணீர் சொரிந்தே..."
இப்பாடலடி புலப்படுத்தும் ரஸத்திற்குரிய ஸ்தாயி பாவம் யாது?

(1) ஜுகுப்ஸா (2) சோக (3) பய
(4) க்ரோத (5) விஸ்மய

**33.** மகாபரத சூடாமணி என்னும் நூலில் உருப்படிகளுக்கு ஏற்ப ஆடைத் தெரிவில் உத்தமத்திற்கு உரிய நிறமாக குறிப்பிடப்படுவது

(1) வெள்ளை (2) சிவப்பு (3) பச்சை
(4) நீலம் (5) மஞ்சள்

**34.** வியபிசாரி பாவங்களில் ஒன்று

(1) விஸ்மய (2) வேபது (3) அவஹித்த
(4) ஸ்தம்பம் (5) வைவர்ணய

**35.** பின்வருவனவற்றுள் சாஸ்திரிய நடனம் **அல்லாதது** எது?

(1) பரதநாட்டியம் (2) மோகினி ஆட்டம்
(3) சொக்கரி (4) கண்டிய நடனம்
(5) பலே நடனம்

**36.** வடமோடிக் கூத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் எவை?

(1) அரசன், அரசி, குரங்கு, குதிரை
(2) அரசன், அரசி, தூதுவர், பணியாள்
(3) வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி
(4) உழவன், உழத்தி, மக்கள், பணியாள்
(5) அரசன், பத்தினிதேவி, புரோகிதர், துறவி

**37.** தேவதாசி மரபிலிருந்த பரதநாட்டியத்தை சமூக அங்கீகாரம் பெற்ற கலை வடிவமாக மாற்றுவதில் முக்கிய பங்காற்றியவர் யார்?

(1) சுப்பராய நட்டுவனார்
(2) ஈ. கிருஷ்ணய்யர்
(3) மயிலாப்பூர் கௌரியம்மாள்
(4) அருணாசல நட்டுவனார்
(5) பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

**38.** நவசந்திகளில் இந்திரசந்தியில் இடம்பெறும் நாட்டியம் யாது?

(1) மண்டலம் (2) குஞ்சிதம்
(3) தண்டபாதம் (4) புஜங்கத்திராசம்
(5) புஜங்கலலிதம்

**39.** தாளதசப் பிராணன்களில் மகாப் பிராணன் **அல்லாதது**

(1) லயம் (2) காலம் (3) அங்கம்
(4) கிரஹம் (5) கிரியை

**40.** பஞ்சஜாதி த திங் கி ண தொம் வரிசையில் கண்டஜாதி, திஸ்ர ஜாதி, மிஸ்ர ஜாதி த திங் கிணதொம் ஆகிய மூன்றும் இணைந்து வரும் போது இரண்டு ஆவர்த்தனங்களுக்கு சதுஸ்ர ஜாதி திரிபுடை தாளத்திற்கு ஆரம்பிக்கும் இடம்

(1) தகதகிட தகதகிட (2) தகதகிட தகிட
(3) தகிட தகிட தகிட (4) தகதிமி தகதிமி
(5) தகதிமி தகதிமி தகதிமி

[பக். 5 ஐப் பார்க்க

- **41** தொடக்கம் **45** வரையான வினாக்களுக்குப் பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| பிரதேசம் | நடனம் | சடங்கு/ உற்சவம் | நடனவகை/ உருப்படி | இசைக்கருவி |
|---|---|---|---|---|
| **A** | உடரட்ட | கொஹொம்பங்காரிய | உடக்கி, வெஸ் நையாண்டி பந்தேரு | கற்றபெர |
| காலி மிரிஸ்ஸ மாத்தறை | **B** | தெவோல்மடுவ கம்மடுவ | சிந்து வண்ணம கோலம் மடு | யக்மேளம் திக்மேளம் கோஷகமேளம் |
| சப்ரகமுவ | சப்ரகமுவ | **C** | முல் மாத்ரய சிந்து மாத்ரய யக்பத யாதினி | தவுள |
| மணிப்பூர் | மணிப்புரி | டொல்சந்ரா ஹோலிகர் | **D** | மத்தளம் கெஞ்சிரா |
| ஒரிஸ்ஸா | ஒடிசி | இதரஜந்ர ஜன்மாஷ்டமி | ஸ்வரஜதி நதங்கி | **E** |

**41.** **A** இல் இடம்பெற வேண்டிய பிரதேசம் யாது?
(1) மட்டக்களப்பு (2) யாழ்ப்பாணம்
(3) கண்டி (4) கம்பஹா
(5) இரத்தினபுரி

**42.** **B** இல் இடம்பெற வேண்டிய நடனம் யாது?
(1) பஹத்தரட்ட (2) இராசரட்ட
(3) மதரட்ட (4) மயாரட்ட
(5) உடரட்ட

**43.** **C** இல் இடம்பெற வேண்டிய சடங்கு அல்லது உற்சவம் யாது?
(1) பகன்மடுவ (2) ஊறா யக்கம
(3) வனே யக்கம (4) தஹ அட்ட சன்னிய
(5) களு குமாரிய

**44.** **D** இல் இடம்பெற வேண்டிய நடன வகை அல்லது உருப்படி யாது?
(1) மயூரபஞ்ச (2) அஸ்னே
(3) துணுமாலப்புவ (4) அபிசார்க்கா நடனம்
(5) கர்தார்சோளம்

**45.** **E** இல் இடம்பெற வேண்டிய இசைக்கருவி யாது?
(1) கைத்தாளம் (2) மிருதங்கம்
(3) கினி (4) எலத்தாளம்
(5) எடக்கி

[பக். 6 ஐப் பார்க்க

**46.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நாயகியால் வெளிப்படுத்தப்படும் சாத்வீக பாவம் எது?

(1) குரோதம்
(2) ஷோக
(3) வைஸ்வர்ய
(4) அஸ்ரு
(5) உத்ஸாஹம்



**47.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நாயகன் யார்?

(1) தீரோத்ததன்
(2) தீரோதாத்தன்
(3) தீரலலிதன்
(4) தீரசாந்தன்
(5) தீரசயந்தன்



**48.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நிறுவனத்தை நிறுவியவர் யார்?

(1) சேர் பொன். இராமநாதன்
(2) ஈ. கிருஷ்ணய்யர்
(3) செல்லையா இராசதுரை
(4) ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல்
(5) எஸ். பரம்




**49.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஆஹார்ய அபிநயம் யாது?

(1) புஷ்டம்
(2) அலங்காரம்
(3) அங்கரச்சனம்
(4) சஞ்சீவம்
(5) அபிசாரி



**50.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ளவர்களினால் ஆடப்படும் கூத்து எது?

(1) மலையகக் கூத்து
(2) மகிடிக் கூத்து
(3) வடபாங்கு
(4) வசந்தன் கூத்து
(5) வாசாப்புக் கூத்து



* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නර්තනය (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Bharatha) II

**53 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இல் **முதலாம்** வினா உட்பட **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) (i) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட இராகத்தில் அமைந்த பதவர்ணத்தின் இறுதி சரணஸ்வரக் கோர்வையினைத் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

(ஆ) (i) நீர் கற்ற தில்லானாவின் இராகம், தாளம் என்பவற்றினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட இராகத்தில் அமைந்த தில்லானாவின் மூன்றாவது பல்லவிக் கோர்வையினைத் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

2. (அ) 'செண்டை' என்னும் இசைக்கருவியினைப் பிரதான தாள வாத்தியமாகக் கொண்ட சாஸ்திரிய நடனத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

(ஆ) 'தரண' என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்திரிய நடனத்தின் வளர்ச்சி பற்றி விவரித்து, அதன் ஆட்டமுறைகள் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

(இ) 'புறுகு' எனப்படும் ஆபரணத்தை அணிந்து ஆடும் சாஸ்திரிய நடனத்தில் இடம்பெறும் நடன நாடகம் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

(ஈ) 'மகரி மரபு' இடம்பெறும் சாஸ்திரிய நடனத்தில் நடனமாதர்கள் இருந்தமைக்கான ஆதாரங்களைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

3. (அ) வீர ரஸத்தினை வரைவிலக்கணப்படுத்தி, அதன் வகைகளை உதாரணங்களுடன் விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) ஹாஸ்ய ரஸத்தின் வரைவிலக்கணத்தையும் அதன் வகைகளையும் குறிப்பிட்டு, அவற்றிற்கு விளக்கம் தருக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki
අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** (அ) சங்க காலத்துக்குரிய கலைஞர்கள், இசைக்கருவிகள், ஆடல் ஒப்பனை முறைகள் ஆகியவற்றை விளக்குக. (05 புள்ளிகள்)

(ஆ) சங்கமருவிய காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஆடல் வகைகள் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

(இ) சோழர் காலத்திற்குரிய 'தலைக்கோலிகள்' பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

(ஈ) நாயக்கர் காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடற்செய்திகளை விளக்குக. (05 புள்ளிகள்)

**5.** சிங்களப் பாரம்பரிய நடனங்களில் ஒன்றாகிய றுகுணு நடனம் பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

**6.** பரத நாட்டியக் கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய பின்வரும் நடனக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் கலைப்பணிகளையும் விவரிக்குக.

(அ) ஸ்ரீமதி பாலசரஸ்வதி (10 புள்ளிகள்)

(ஆ) தஞ்சை சு. பொன்னையா (10 புள்ளிகள்)

**7.** "பரத நாட்டிய அவைக்காற்றுகையை மிகச் சிறப்பாக அளிக்கை செய்வதற்கு அணிசேர் கலைஞர்களின் ஒத்திகைகள் இன்றியமையாதன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) நாயன்மார் பாடல்களில் ஆடற் குறிப்புகள்

(ஆ) பறைமேளக் கூத்து

(இ) சசப்தக்ரியா

(ஈ) பக்தி மார்க்கம்

(05 × 4 = 20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library